**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2023 ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.3-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.1004/2021

வா.சா. 1 சசிக்குமார்

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

வாதி நல்லசாமி என்னை சாட்சி கையெழுத்து போட எப்போது அழைத்தார் என்றால் வாதி என்னை அழைக்கவில்லை, சாட்சி சதீஸ்குமார் வாதியிடம் மாடு வாங்குவதற்காக என்னை அழைத்தார், அதன் பேரில் வாதி வீட்டிற்கு போனேன். தற்போது நான் செட்டிப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். சதீஸ்குமார் என்பவர் எனக்கு பழக்கமானவர். வாதியிடம் மாடு வாங்கவில்லை. அதன் பிறகு சதீஸ்குமாருடன் நான் போகவில்லை. வாதி தன்னுடைய கஷ்டத்திற்காக மாடு விற்கும் விபரம் தெரிந்து மாடு வாங்க போனோம் என்றால் சரியல்ல, வாதியிடம் நான்கு மாடுகள் இருப்பதால் அதை சரியாக கவனித்துக் கொள்ள முடியாததால் ஒரு மாடு விற்பனை செய்வதாக இருப்பதை தெரிந்து மாடு வாங்க போனோம். நான் தற்போது கதவு எண்.338/4, ஸ்ரீ சக்தி கார்டன், பெரிய செட்டிப்பாளையம், ஈரோடு -2 என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன், மேற்படி முகவரியில் 8 வருடமாக குடியிருந்து வருகிறேன். நான் 9-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டு முகவரி தவறானது என்றால் சரியல்ல, அந்த முகவரியில் தான் என்னுடைய சொந்த வீடு உள்ளது. அந்த முகவரியில் என்னுடைய குடும்ப அட்டை, ஆதார் கார்டு மற்றும் இதர ஆவணங்கள் உள்ளது. மேற்படி முகவரியில் நான் வசிக்கவில்லை என்றால் சரிதான். நான் வாதியுடன் மாடு வாங்க போன போது தாவா கடனுறுதிச் சீட்டில் கையெழுத்து போட்டதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்று வா.த.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டு போலியானது என்றால் சரியல்ல. நான் சாட்சி கையெழுத்து போட்டு என்னுடைய முகவரி எழுதவில்லை என்றும், வா.த.சா.ஆ.1 ஆவணம் போலியானது என்பதால் தான் என்னுடைய முகவரியை எழுதவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய ஊர் காசிபாளையம் என்று வா.த.சா.ஆ.1

ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளேன், அந்த ஊர் எந்த மாவட்டம், எந்த வட்டத்தில் அமைந்துள்ளது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் வா.த.சா.ஆ.1 ஆவணத்தில் கையெழுத்து போட்டபிறகு தான் சதீஸ்குமார் வா.த.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டை எழுதினார் என்றால் சரியல்ல. குணசேகரன் சொல்ல சொல்ல சதீஸ் குமார் எழுதினார். பிரதிவாதியை எனக்கு 5,6 வருடங்களாக தெரியும். பிரதிவாதியின் அப்பா பெயர் தெரியாது. பிரதிவாதி மட்டும் தான் தெரியும். பிரதிவாதியின் தந்தை பெயர் வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவர் பெயர் தெரியாது. பிரதிவாதியை எனக்கு தெரியாது, வாதி மட்டும் தான் பழக்கம். அதனால் வாதியின் வீட்டிற்கு சென்றேன். வாதியின் அப்பா பெயர் ஞாபகமில்லை. வாதியின் வீடு சென்னப்ப நாயக்கன்பாளையத்தில் உள்ளது, அவரது முகவரி தெரியாது. வாதி பிரதிவாதிக்கு ரூ.1,25,000/-ம் கொடுத்தார். அதை ரூபாய் 500 தாள்களாக கொடுத்தார், மொத்த எத்தனை தாள்கள் இருந்தது என்று தெரியாது. காலையில் பணம் கொடுத்தார். வா.த.சா.ஆ.1 கடனுறுதி ஆவணத்தில் உள்ள சங்கதிகள் தெரியும் என்று ஒப்புக் கொண்டு தான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். வாதி மற்றும் பிரதிவாதியின் அப்பா பெயர் மற்றும் மேற்படி வாதி மற்றும் பிரதிவாதியின் முழு முகவரி எனக்கு தெரியாது என்றால் சரிதான். ரூ.1.50 வட்டிக்கு பிரதிவாதி, வாதியிடம் பணம் வாங்கினார். பிரதிவாதி இரண்டு கையெழுத்து போட்டார், வாதி கையெழுத்து போடவில்லை, நான் ஒரு கையெழுத்து போட்டேன். பிரதிவாதி கைரேகையும் வைத்தார், இரண்டு கைரேகை வைத்தார். 16.02.2020 தேதி வாதி பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததாக புரோநோட் எழுதப்பட்டுள்ளது என்றால் என் முன்பாக தான் பிரதிவாதி வாதியிடம் பணம் வாங்கிக் கொண்டு புரோநோட் எழுதிக் கொடுத்தார். வாதி மோசடியாக வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டு தயார் செய்து கொண்டார் என்றும், வாதியிடம் பிரதிவாதி பணம் எதுவும் பெற்றுக் கொள்ளவில்லை என்றும், வாதி மோசடியாக தயார் செய்து கொண்ட கடனுறுதிச் சீட்டிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:-** இல்லை